Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி மீ 31 உ திங்கட்கிழமை (15-07-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 222


### ஆனையிறவில் சிக்கியுள்ள இராணுவத்தை மீட்பதற்காக

# கட்டைக்காட்டில் இறங்கிய படை சுற்றிவளைக்கப்பட்டது

## புலிகள் கடும் தாக்குதல்

தாளையடி, ஜூலை 15

புலிகளின் முற்றுகையினால் ஆனையிறவு முகாமுக்குள் சிக்கிப் போயிருக்கும் இராணுவத்தினரை மீட்க ஸ்ரீலங்காப் படையினர் கடல் வழியாக, வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்று மாலை தரையிறங்கினர். கடும் விமானத் தாக்குதலை நடத்தியபடி பல பீரங்கிப் படகுகள் மூலம் தரையிறங்கிய படையினரை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கிவருவதாகவும்—

அப்பகுதியில் கடும் சண்டை தொடர்வதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக் காலை முதலே ஹெலிக்கொப்டர்கள், அவ்ரோ விமானங்கள் மற்றும் பொம்மர்கள்ஆகியன தாளையடி, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் கடும் வானத் தாக்குதல்களை நடத்தியவண்ணம் இருந்தன.

இவற்றுக்கு மத்தியில் இரண்டு பாரிய கடற்படைக் கப்பல்கள் சகிதம் பத்துக்கும் அதிகமான பீரங்கிப் படகுகளில் வந்த படையினர், கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலை நடத்திய வண்ணம் முன்னேறினர்.

ஆனையிறவில் இருந்து சுமார் ஐந்து மைல் தூரத்திலுள்ள வெற்றிலைக்கேணிக் கரையோரப் பகுதியை நோக்கி படையினர் முன்னேறிய போது அவர்களை நோக்கி விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடும் விமான, பீரங்கி தாக்குதல்

தாளையடி, ஜூலை 15

ஸ்ரீலங்காப் படையினர் கடல் வழியாகத் தரையிறங்கியுள்ள வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதியை நோக்கி கடந்த இரு நாட்களாக கடும் விமான, பீரங்கித் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் பெரும் உடைமைச் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

நான்கு பொம்மர்கள், இரு அவ்ரோக்கள் மற்றும் ஹெலிக்கொப்டர்கள் மாறி, மாறி குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. கடலில் தரித்து நிற்கும் பீரங்கிப் படகுகளில் இருந்தும் கரையோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இந்தத் தாக்குதல்களினால் வடமராட்சி கிழக்குப் பகுதி அடிக்கடி அதிர்ந்த வண்ணம் இருக்கிறது.

நாகர்கோவிலில் நேற்று நண்பகல் குடியிருப்புப் பகுதிகள் மீது கண்மூடித்தனமான விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆனையிறவு மோதலை அடுத்து இடம்பெயர்ந்து நாகர்கோவில் பகுதியில் தஞ்சம் புகுந்திருந்த அப்பாவி மக்கள் இக்குண்டு வீச்சை அடுத்து கிலிகொண்டு நாலாபுறமும் ஓடினர்.

குண்டு வீச்சை அடுத்து இப்பகுதியில் தஞ்சம் புகுந்திருந்த சுமார் 300 குடும்பங்கள்

[4-ஆம் பக்கம் பார்க்க]

## 4 மீனவரை காணவில்லை

வெற்றிலைக்கேணியில் நேற்று நண்பகல் மோதல் சம்பவம் இடம்பெறுவதற்குச் சற்று முன் கடற்றொழில் செய்வதற்காக கட்டுமரத்தில் சென்ற நான்கு மீனவர்கள் காணாமற்போயிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டுமரத்தில் வலையிழுக்கச் சென்ற வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை [வயது 38], தம்பிப்பிள்ளை வசந்தகுமார் [வயது 28], சின்னத்தம்பி [வயது 48], குட்டிமான் [வயது 49] ஆகிய நால்வருமே காணாமற்போனவர்களாவர். (உ-15)

## உப்பள அலுவலக முகாமை முற்றாக வீழ்த்த முயற்சி!

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று ஐந்தாவது நாளாகத் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்றன,

நேற்று முன்தினம் இரவு தாக்குதல்களுக்கு இலக்கான ஆனையிறவு உப்பள பிரதான அலுவலக முகாம்மீது நேற்றிரவும் கடும் தாக்குதல் தொடுக்கப் பட்டதாகத் தெரியவந்தது.

இந்த முகாம்மீது நேற்று முன்தினம் இரவு புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் முகாமின் கணிசமான பகுதி புலிகள்வசம் வீழ்ந்தது என்பதும்—

இத்தாக்குதலில் உயிரிழந்த பல படையினரின் சடலங்கள் உட்பட பெருமளவு ஆயுதங்களை விடுதலைப்புலிகள் மீட்டனர் என்பதும் தெரிந்தவையே.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் ஆரம்பித்தஇந்த மோதல் நேற்று அதிகாலை வரை தொடர்ந்தது.

காலையில் மோதல் சற்று ஓய்ந்தபோது, பாதுகாப்புக் கருதி புலிகள் இரவில் கைப்பற்றிய இந்த முகாம் பகுதியி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காயமடைந்த 6 படையினர் சிகிச்சையின்றி உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 15

ஆனையிறவு முகாமுக்குள் காயமடைந்தவர்களில் ஆறு படையினர் உரிய சிகிச்சை இன்றி உயிரிழந்தனர். நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி இதனை அறிவித்தது.

ஆனையிறவு முகாமிற்குள் ஹெலிக்கொப்டர்கள் தரையிறங்க முடியாத நிலை இருப்பதால் காயமடைந்த படையினரை மீட்க முடியாதிருப்பதாக கொழும்பில் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆனையிறவுப் படைகளுக்கு உணவுப் பற்றாக்குறை?

ஆனையிறவு முகாமில் சிக்கிப் போயிருக்கும் படையினருக்கு உணவு மற்றும் பொருள்களை விநியோகிக்க முடியாதிருப்பதால் முகாமினுள் உணவு மற்றும் பொருள்கள் முடிவடையும் நிலையில் உள்ளன.

கொழும்பு ஏஜென்ஸிச் செய்திகள் நேற்று இத்தகவலை வெளியிட்டன.

ஆயிரத்துக்கும் அதிகமான துருப்புகளைக் கொண்ட இந்த முகாமுக்கு தினசரி தேவையைப் பூர்த்தி செய்ய பெருமளவு உணவுப் பொருள்கள் அவசியம் என்பது சுட்டிக் காட்டப்பட்டது. (உ-எ)

## மிக நெருக்கமாக நின்று படையினர் - புலிகள் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஆனையிறவு முகாம் பகுதியில் சில நூறு யார் தூரத்தில் நின்று மோதி வந்த விடுதலைப் புலிகளும் ஸ்ரீலங்காப் படையினரும் தற்போது மிக நெருக்கமாக நின்று துப்பாக்கிச் சமர் புரியும் இறுதிக் கட்டத்தில் இருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

முகாமின் பிரதான பகுதிகளை விடுதலைப் புலிகள் நெருங்கியிருப்பதை அடுத்து- அருகருகேஉள்ள ''பங்கர்''களில் நின்றவாறு, காவல் அரண்கள் ''உனக்கா '

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகர் ஷெல்லுக்கு மூளாயில் பெண் பலி!

யாழ்ப்பாணம். ஜூலை 15

காரைநகர் படையினர் நேற்று முன்தினம் இரவு ஏவிய ஷெல்கள் மூளாய்ப் பகுதியிலும் விழுந்து வெடித்தன.

ஷெல் வீச்சுக்கு இலக்காகி மூளாய் மேற்கில் பெண் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றும் 6 பேர் காயமடைந்தார். இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவரான சுப்பிரமணியம் பாக்கியம் [55 வயது] என்பவரே உயிரிழந்தவர் ஆவார்,

காயமடைந்த சிவஞானம் பத்மாவதி [37 வயது] யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சங்கத்தானையில் ஷெல் வயோதிபர் மரணம்!

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றிரவு 8-30 மணியளவில் தென்மராட்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. சங்கத்தானையில் விழுந்த ஷெல்லுக்கு வயோதிபர் ஒருவர் பலியானார். இருவர் காயமடைந்தனர்.

நுணாவில், சாவகச்சேரிப் பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் பெயர், விவரம் தெரியவரவில்லை.

காயமடைந்த கணபதிப்பிள்ளை கனகேஸ்வரி (40 வயது), வலத்தீஸ் ஓர்த்தநாயகம் (40 வயது) ஆகிய இருவரும் நேற்று நள்ளிரவு யாழ், ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (ஓ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாடசாலை சிறுவருக்கு உரிய ஹீரோ [Hero] துவிச்சக்கரவண்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு மு. விமலநாதன், 16/12, விதானையார் வீதி, ஈச்சமோட்டை. [4200]

### உடன் விற்பனைக்கு

எம்மிடம் புதிய, பழைய சினிமாப்பட வீடியோ கொப்பிகள் மலிவான விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மீரா வீடியோ விஷன், மருதடிப் பிள்ளையார் கோவிலடி, நுணாவில் மேற்கு, விளைவேலி, சாவகச்சேரி. (4195)

### மணமகள் தேவை

யாழ். இந்து 40 வயது மணமகனுக்கு செவ்வாய் தோஷம் அற்ற 38 வயதுக்கு உட்பட்ட மணமகள் தேவை. வெளிநாடு செல்ல பணவசதி இருப்பின், விவாகரத்து செய்தவர்களும், தாரம் இழந்தவர்களும் புகைப்படம், சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். இல: 332, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [17521]

### லக்கி தையல் நிலையம்

ஆண்களுக்கான ஷேர்ட், சோட்ஸ், ஜீன்ஸ் மற்றும் பெண்களுக்கான ஆடைகள் இன்றைய நாகரீக முறையில் உரிய நேரத்தில் தைத்துக் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு விசேஷ சலுகைகள் உண்டு. 182, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [17522]

### ரைப்ரைட்டர் சேவை

தட்டச்சு இயந்திரங்கள் (Typewriters) வாங்கவும், விற்கவும் மற்றும் சிறந்த முறையில் திருத்தவும் தொடர்பு கொள்ளவும்; பிரியா ஸ்ரூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-0194]

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைச்சுற்று, காலவியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4170]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4156]

## புலிகளின் குரல் சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 15
ஆனையிறவு சண்டை குறித்த செய்திகளை வெளியிட புலிகளின் குரல் விசேட ஒலிபரப்பு ஒன்றை தினமும் காலை 7-00 மணி முதல் 8 மணி வரை நடத்தி வருகிறது.

அதே சமயம் இரவிலும் இந்த ஒலிபரப்புச் சேவை 10-00 மணிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது. [இ-3]

## அழைப்பு

கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பலாலி ஆசிரியகலாசாலையின் அனைத்து ஆசிரிய மாணவர்களும் விரிவுரையாளர்களும் இன்று திங்கள் மீண்டும் கலாசாலைக்குச் சமுகமளிக்கும்படி அதிபர் கேட்டுள்ளார். [உ]

## கண்ணீர் அஞ்சலி

செல்வி
**பத்மசோதி சண்முகநாதபிள்ளை**
[வானதி]

வீரஜெனனம்: 19-02-1964 வீரமரணம் 10-07-1991

''வேங்கை மறப்புலிப்பெண் வானதி சென்றடைந்தாள்
ஆங்குபோர் ஆனை யிறவதனில் — ஓங்குதமிழ்
ஈழம் மலர்ந்திடவே ஏற்ற பணியாற்றி
வாழ வழிவகுத்து வான்''

நயினாதீவு நா. க. சண்முகநாதபிள்ளை [அதிபர், யாழ். மத்திய கல்லூரி] - திருமதி பத்மாசனி தேவி தம்பதிகளின் தலைமகள் பத்மசோதி [வானதி] தாய் மண் மீட்புப் போரில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

இவர் கலாநிதி [விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்], அமுதபதி [அனிதா பாடசாலை], உமாசுதன் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இவரது பூதவுடல் போர்க்களத்தில் புனித மண்ணுக்கு அர்ப்பணமாகியது. அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுகிறோம்.

நா. க. சண்முகநாதபிள்ளை
குடும்பத்தினர்
174, கோவில் வீதி,
நல்லூர். (17281)

## வீர வணக்கங்கள்

**பத்மசோதி சண்முகநாதபிள்ளை**
(வானதி)
19 - 2 - 1964

ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பு முயற்சியில் 12 - 7 - 91 அன்று வீரமரணமெய்திய பெண் புலி வானதிக்கு எமது வீர வணக்கங்கள்.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.
(17525)

## கண்ணீர் அஞ்சலி

**செல்வி பத்மசோதி**

யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. சண்முகநாதபிள்ளையின் புதல்வி செல்வி பத்மசோதியின் மறைவிற்கு, எமது கண்ணீர் அஞ்சலிகள்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்.
(175 26)

## கண்ணீர் அஞ்சலி

ஆனையிறவு முகாம் மோதலில் வீரமரணம் அடைந்த
★ **வானதி** ★
[பத்மசோதி சண்முகநாதபிள்ளை]

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.
அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி.
(17278)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
11-03-1966



மறைவு:
15-07-1989

**சிற்றம்பலம் தயானந்தராசா**
(மேஜர் ஞானவேல்)

ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

குடும்பத்தினர்.
இடைக்குறுச்சி,
வரணி. [17449]

## மரண அறிவித்தல்கள்

### வேதநாயகம் விக்கினமூர்த்தி

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த கண்டி திருத்துவக் கல்லூரி [Trinity College] ஆசிரியர் வேதநாயகம் விக்கினமூர்த்தி 7-7-1991 அன்று அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற வேதநாயகம், மோகனாம்பாள் வேதநாயகம் ஆகியோரின் அன்பு மகனும், விக்கினேஸ்வரன் [வீதி அபிவிருத்தி அதிகார சபை, மட்டக்களப்பு], Dr. விக்கினராஜா [தள வைத்தியசாலை, திருகோணமலை], விக்கினேஸ்வரி [கச்சேரி, யாழ்ப்பாணம்], விக்கினாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி அகலிகை விக்கினேஸ்வரன் [அரசினர் வைத்தியசாலை. மட்டக்களப்பு], திருமதி இராசமலர் விக்னராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சதீஷின் சிறிய தந்தையும், ஆயுள் வேத வைத்தியர் இராசரத்தினம் அவர்களின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக 15ஆம் திகதி [இன்று] திங்கட்கிழமை திருகோணமலை தள வைத்தியசாலை விடுதியில் இருந்து 4-00 மணிக்கு இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தாயார்
இராணி மகால்,
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு. [17524]

### முருகேசு மங்கையர்க்கரசி

[நீலிப்பந்தனை - காரைநகர்]

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த முருகேசு மங்கையர்க்கரசி 2 - 7 - 91 செவ்வாய்க்கிழமை காரைநகரில் காலமானார். அன்னார் இளைப்பாறிய தபால் அதிபரும், சமாதான நீதவானுமாகிய ஆறுமுகம் முருகேசுவின் அன்பு மனைவியும், புவனச்சந்திரனின் (சிங்கர் மெஷின் கம்பனி இரத்மலானை) அன்புத் தாயாரும் சிவனேஸ்வரியின் அன்பு மாமியாரும், யசோதரன், அம்பிகா, பாலேந்திரன், ரவீந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கதிரவேலு, வைரமுத்து, திருமதி பாக்கியம கதிர்காமத்தம்பி, திருமதி சொர்ணம் விஜயதர்மா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
க. சிறீகரன்
(17282)

### திருமதி அந்தோனியாப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை

கரம்பனைச் சேர்ந்த திருமதி அந்தோனியாப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை காலமானார். இவர் காலம்சென்ற சிங்கராயர் வஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் அன்னம்மாவின் அன்புச் சகோதரியும் திரு. போல் இராஜநாயகத்தின் மைத்துனியும் அதி வந்தனைக்குரிய L. R. அனரனி ஆண்டகையின் உடன் பிறவாச் சகோதரியும், அமிர்தநாயகம், தர்மா அலெக்சாண்டர், சோமா செல்வராஜா, அருட்திரு R. H. சகாயநாயகம், மாத்தா மகேந்திரன், தனிநாயகம், லக்ஸநாயகம் ஆகியோரின் பெரிய தாயும் திரு. அலெக்சாண்டர் [அதிபர் கணேஸ்வரா மகா வித்தியாலயம் பாவற்குளம்] அவர்களின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 15 - 7 - 91 திங்கடகிழமை பி. ப. 3.30 மணிக்கு இல 65 மருதடி வீதி இல்லததிலிருந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தர்மா அலெக்சாண்டர்
இல. 65 மருதடி வீதி,
யாழ்ப்பாணம். [17284]

### திருமதி மகேஸ்வரி கந்தசாமி

மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியைச் சேர்ந்த மகேஸ்வரி கந்தசாமி வெள்ளிக்கிழமை [2-7-91] கொழும்பில் காலமானார். அன்னார் திரு. கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சோமசுந்தரம், கிளிநொச்சி லீலாவதி, சிவசம்பு, மருதலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும, திரு. கந்தையா, கண்மணி, புஷ்பம், இராசலட்சுமி ஆகியோரின மைத்துனியும், விக்கினேஸ்வரி. ஜெயபாலன், நந்தகோபாலன், ஞானேஸ்வரி, யோகேஸ்வரி (பிரான்ஸ்), பரமேஸவரி [பிரானஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரசாமி. சுந்தரராஜன், நவரட்ணம் (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), கமலேஸ்வரி, பத்மாவதி [சவூதி] ஆகியோரின் அன்பு மாமியாரும், அசோக்குமாரின் [பிரான்ஸ்] பேத்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை றோட்.
மானிப்பாய்.
[17279]

தகவல்:
பெ. சுந்தரராஜன்
[மருமகன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# நெருக்கடியும் நெருக்கமும்

ஆனையிறவில் பெரும் போர் நடந்து கொண்டிருக்கிறது அது எப்போது முடியும் என்று உடனடியாக எவராலும் அச்சொட்டாகச் சொல்ல முடியாத நிலை. அவ்வாறிருக்க, யாழ். மாவட்டத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படும் அபாயம் உண்டென அரசாங்க அதிபர் எச்சரிக்கிறார்.

அரசாங்கம் யுத்தத்தைப் பிரகடனம் செய்த பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமன்றி, கிழக்கு மாவட்டங்கள் உட்பட்ட தமிழ்ப் பகுதிகள் எங்கும் உணவுப் பற்றாக்குறை நிலவுவது தெரிந்த விடயம். அரசாங்கம் பிரகடனப்படுத்தாமல் நடத்தும் பொருளாதாரத் தடையின் இந்தத் தாக்கம், கடந்த பதினான்கு மாதங்களாகவே உண்டு.

இம்முறை உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்த கப்பல் வழமை போல் பருத்தித்துறையில் அவற்றை இறக்கவில்லை. இராணுவப் பிரதேசமான காங்கேசன்துறைக்குச் சென்றது.

ஆனையிறவு, கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குள் இருக்கும் பிரதேசம். எனினும் அங்கு போர் தொடங்கியதும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் ஊரடங்கு என அறிவிக்கப்பட்டது. ஊரடங்கைச் சாட்டாக வைத்துக் கொண்டு யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்த உணவுப் பொருள்கள் இறக்கப்படவில்லை!

எந்த நேரத்தில் எதனைச் செய்தால், தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து பிரிக்கலாம், வெறுப்புக் கொள்ளச் செய்யலாம், அந்நியப்படவைக்கலாம்என்ற சிந்தனையுடனேயே அரசின் நடவடிக்கைகள் வகுக்கப்படுகின்றன. ஆனால் அரசாங்கத்தின் அந்த நோக்கம் படுதோல்வி அடைந்திருக்கிறது என்பது மட்டும் நிச்சயம்!

அரசாங்கம் எந்தளவுக்குத் தமிழ் மக்களை வாட்டி வதைக்கிறதோ அதனைவிட மூன்று, நான்கு மடங்கு வாஞ்சையுடன் சென்று போராளிகளை நெருங்கிக் கொள்கிறார்கள் மக்கள். அரசு போடும் நெருக்கடிகள் அதிகரிக்க அதிகரிக்க, மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உள்ள நெருக்கமும், இறுக்கமும் அதிகரிக்கின்றன. இது உளவியல் ரீதியான ஓர் இயல்பான செயற்பாடு.

அந்த நெருக்கத்தின், இறுக்கத்தின் பிரதிபலிப்பை இப்போது-ஆனையிறவுப் போரின் போது - கண் முன்னே காண முடிகிறது. களத்தில் நின்று போராடும் போராளிகளுக்கு உதவுவதற்கும், அவர்களைப் பராமரிப்பதற்கும் மக்கள் போட்டி போட்டுக் கொண்டு நிற்பது வெளிச்சமான ஒன்று.

முட்டை மாவா? செவ்விளநீரா? இரத்தமா? எது வேண்டும்? நாம் தருகிறோம், நாம் தருகிறோம் என்று மக்கள் முண்டி அடிக்கிறார்கள். நான் முந்தி, 'நீ பிந்தி' என்று "சண்டை" போடுகிறார்கள்!

தாம் தயாரித்த முட்டைமா ஆனையிறவுக் களத்தில் நிற்கும் போராளிகளுக்குப் போய்ச் சேரவேண்டும் என்ற அக்கறை காட்டிய ஒரு தாயின் மனம்; ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போன்றது.

அரசாங்கத்தின் உளவியல் போராட்டம் எப்படி அதற்கு எதிராக மாறி தோல்வி கண்டுள்ளது என்பதை இனியாவது அது உணர்ந்து கொண்டால் போதும். தமிழ் மக்களைப் பற்றி தப்புக் கணக்குப் போடாமல் இருந்தால் சரி!

# ஹெலியிலிருந்து றொக்கட் வீச்சு

### அம்புலன்ஸ் சாரதி காயம்

தென்மராட்சி, ஜூலை 14

பளைப் பகுதியில் வெள்ளி அதிகாலை ஹெலியில் இருந்து றொக்கட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் அவசர நோயாளரை ஏற்றிக் கொண்டு வந்த பளை ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் தாக்குதலுக்குள்ளாகி பளை பிரசவ விடுதிக்கு முன்பாக பலத்த சேதத்திற்குள்ளானது.

அம்புலன்ஸ் சாரதி மயில்வாகனம் இராசரத்தினம் [வயது 48] காயங்களுக்குள்ளாகி பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதே தினம் முகமாலை தேவாலயத்துக்கு அருகில் பழுதடைந்து நின்ற வாகனம் ஒன்றை நோக்கியும் ஹெலியிலிருந்து சரமாரியாக கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் முகமாலையில் உள்ள எரிபொருள் விற்கும், கொட்டில் மீது விழுந்த குண்டினால் கொட்டிலுக்குள் விரித்திருந்த பாய் எரிந்து சாம்பரானது. கொட்டிலுக்குள் படுத்திருந்தவர் மயிரிழையில் உயிர் தப்பினார். [இ-117]

# பளையில் பொம்மர் தாக்கு; கோயில், பிரசவவிடுதி சேதம்

தென்மராட்சி, ஜூலை 14

பளை நகரப் பகுதியை வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் இரட்டைக்கேணி அம்பாள் ஆலயம், பளை பிரசவ விடுதி, பளை பிரதேச சபை, பொது நூலகம் உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்தன.

இதற்கிடையில் வெள்ளிக்கிழமை அதிகாலை பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் மிருசுவில் தேவாலயத்துக்கு முன்பாகவுள்ள காணி ஒன்றில் வீழ்ந்து வெடித்தன.

தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்ததால் இப்பகுதி மக்கள் சிலர் அயல் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

### பளை முதல் சாவகச்சேரி வரை

# முழு இரவும் ஹெலி தாக்கு; மக்கள் பதுங்குகுழிகளுக்குள்

தென்மராட்சி ஜூலை 15

நேற்று முன்தினம (சனிக்கிழமை) இரவு முழுவதும் கண்டி வீதிப் பகுதியில் ஹெலி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணமிருந்தது.

இதனால் பளையிலிருந்து சாவகச்சேரி வரையுள்ள மக்கள் பெரும் பீதி அடைந்தனர். அனேகர் இரவு முழுவதும் பதுங்கு குழிகளுக்குள் காலத்தைக் கழித்தனர்.

பளை நக்ரப் பகுதி, கச்சார் வெளி, முகமாலை, எழுதுமட்டுவாழ், மிருசுவில் பகுதிகளிலேயே கூடுதலாக ஹெலி தாக்குதல் இடம்பெற்றது.

இதே வேளை ஆனையிறவு முகாமில் இருந்து நேற்று முன்தினம் ஏவப்பட்ட பல ஆட்லறி ஷெல்கள் பளை, மாசார், புதுக்காடு ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. (ஒ-117)

# எங்கும் சோகமயம் புகழுடல்களுக்கு அஞ்சலி

ஆனையிறவு முகாம் மோதலில் களப்பலியான போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பகுதிகள் சோகமயமாக நேற்று காட்சியளித்தன.

இப்பகுதியிலுள்ள சந்தைகள், வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

வீதிகளெங்கும் தோரணங்கள் தொங்கவிடப்பட்டு சந்திகளில் சோககீதம் இசைத்தவண்ணமிருந்தன.

போராளிகளின் புகழுடல்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு கொண்டு வரப்பட்ட போது பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். (இ-117)

# மேலும் 10 போராளிகளின் புகழுடல்கள் தகனம்

கொடிகாமம், ஜூலை 14

ஆனையிறவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சண்டையில் வீரமரணம் அடைந்த மேலும் பத்துப் போராளிகளின புகழுடல்கள் சனிக்கிழமை கொடிகாமம் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

புகழுடல்களின்வருகையால் கொடிகாமம் சோக்மயமாகக் காட்சி அளிக்கிறது. [இ-75]

# ரஞ்சன் கொலைச் சம்புவம்; ஐவரை தேடி வேட்டை

கொழும்பு, ஜூலை 15

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாகப் பொலீஸார் மேலும் ஐவரைத் தேடி வலைவிரித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்த ஐந்து பேரும் கைதானால், ரஞ்சனின் கொலை பற்றிய மர்மமும் துலங்கிவிடும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

வெடிமருந்து நிபுணர் எனக் கூறப்படும் ரவிகுமார், தனியார் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றில் பணிபுரிந்த ரவி என்றழைக்கப்படும் குமாரசாமி ரவிராஜன், 41 வயதுடைய அம்மாஎன்ற பெண், லொறிச் சாரதி சுகந்திரன், மற்றும் ஒருவர் ஆகிய ஐவரையே பொலிஸார் தேடுகின்றனராம். (ஒ-எ-3)

# ஈழ அகதிகள் பட்டியல் ஸ்ரீலங்காவிடம் கையளிப்பு

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் பெயர் மற்றும் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று இந்தியாவினால் ஸ்ரீலங்கா அரசிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அகதிகளை விரைவில் தாயகம் திருப்பி அனுப்பி வைப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இப்பட்டியல் கையளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

### பொருள்களை இறக்க வசதியாக

# பருத்தித்துறை பகுதியில் ஊரடங்கை நீக்குக!

### யாழ். அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 15

பருத்தித்துறை இறங்கு துறைப்பகுதியில் ஊரடங்கை தளர்த்தி, கப்பல்களில் இருந்து உணவுப் பொருள்களை இறக்க நடவடிக்கை எடுக்குமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகத்தை யாழ் அரச அதிபர் அவசர செய்தி ஒன்றின் மூலம் கேட்டுள்ளார்.

உணவுப் பொருள்களுடன் பருத்தித்துறை வந்த இரு கப்பல்கள் புதன் முதல் அமுலுக்கு வந்த ஊரடங்கை அடுத்து பொருள்களை இறக்காமலேயே காங்கேசன்துறை துறைமுகப்பகுதிக்குகொண்டு செல்லப்பட்டுள்ளன.

தற்போது குடாநாட்டில் உள்ள உணவுப் பற்றாக் குறையை நீக்குவதற்காக உடனடியாக பொருள்களை இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் அரச அதிபர் அவசர கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார். [உ.5]

### முஸ்லிம் ஊர்காவலர் அட்டூழியம்:

# கிழக்கில் 300 குடும்பங்கள் பீதியால் வெளியேறின

முஸ்லிம் ஊர்காவலரின் தாககுதலை அடுத்து மட்டக்களப்பு 12, 13 ஆம் கொலனிகளைச் சேர்ந்த சுமார் 300 தமிழ்க் குடும்பங்கள் இடம் பெயர்ந்து நாவிதன்வெளி மற்றும் 7 ஆம் கொலனி ஆகிய இடங்களில் தஞ்சம் அடைந்திருக்கின்றன.

கிழக்கில் அன்னமலை என்ற இடத்தில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஏழு தமிழர்களை படையினர் முகாமுக்குக் கூட்டிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

# அத்தியாவசிய மருந்து இருப்புக் குறைகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது அவசர சத்திர சிகிச்சை நோயாளர்களுக்கான அத்தியாவசிய மருந்து வகைகளின் இருப்பு குறைந்து வருகிறது.

வார்ட்டில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்கள் கூட சில அவசிய மருந்து வகைகளை வெளியில் விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது.

தற்போதைய தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாக அவசிய தேவைகளுக்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவினர் சத்திர சிகிச்சைத் தேவைகளுக்கான சில மருந்து வகைகளை வைத்தியசாலை நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர்.

இம் மருந்து வகைகளும் ஏறக்குறைய 2 கிழமைகளுக்கே போதுமானவை என வைத்தியசாலை வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது, (இ-15)

# உள்ளூராட்சித் தேர்தல்: தி. மு. க. தயாராகிறது!

சென்னை, ஜூலை 14

தமிழகத்தில் எதிர்வரும் செப்டம்பரில் நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக தனது தோழமைக் கட்சிகளுடன் பேச்சுகள் நடத்தி உடன்பாடு காண தி. மு. க. ஆறுபேர் கொண்ட குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

இத்தகவலை தி. மு. க. பொதுச் செயலாளர் க. அன்பழகன் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார். [இ-எ]

# கொழும்பில் நிரந்தரமாக வசிப்போரும் பெயர் பதிவு

கொழும்பு, ஜூலை 14

கொழும்பு மாநகரில் நிரந்தரமாக வசிப்பவர்களும் பொலீஸ் நிலையங்களில் தங்கள் பெயர் மற்றும் விவரங்களைப் பதிவு செய்கின்றனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

மாளிகாவத்தைப் பகுதியில் நிரந்தரமாக வசிப்பவர்களின் வீடுகளுக்குப் பொலீஸார் சென்று விவரங்களைப் பதிவு செய்வது தொடர்பான விண்ணப்பங்களை விநியோகித்து வருகின்றனர். (இ-எ)

# பல்கலை. மாணவர் உதவி

ஆனையிறவில்நடைபெற்று வரும் யுத்தத்தில் காயம் அடைந்த போராளிகளைப் பராமரிக்கவும், உதவிகள் புரியவும் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழகத்தில் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதனை அடுத்து பல்கலை. மாணவர்கள் தமது சேவையைத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் இரத்த தான வைபவம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பலர் அதில் பங்குபற்றினர். [இ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

### C. C. சோமசேகரம் J. P. U. M.

03-07-1991 அன்று காலஞ்சென்ற எமது அன்புத் தெய்வத்தின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு எமக்கு எத்தனையோ வழிகளில் பேருதவி புரிந்தவர்களுக்கும், அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றோம்.

பாரியாரும் குடும்பத்தினரும்.

180A. நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [17517]

இலங்கை

## தமிழர் ஆசிரியர் சங்கம்

தமிழீழ மண்மீட்புப் போரில்
தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும்
ஆனையிறவு முகாம் தகர்ப்பில்
**வீரமரணம் அடைந்த வீர வேங்கைகளுக்கு**
**வீர வணக்கத்தையும்,**
**கண்ணீர் அஞ்சலியையும்**
**செலுத்துகின்றது.**

இப் போரினால் ஏற்பட்டிருக்கும் அவசரமானதும் முக்கியமானதுமான கீழ்வருவனவற்றைச் செய்வது நம் கடமையாகும்.

(அ) இரத்த தானம்
(ஆ) காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல்
(இ) உலர் உணவு, ஏனைய பொருள்களைச் சேகரித்தல்

இப் பணிகளை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து செய்யுமாறும். இரத்த தானம் செய்ய விரும்புவோரும், காயப்பட்ட போராளிகளைப் பராமரிக்க விரும்புவோரும், ஆஸ்பத்திரி வீதியில் இருக்கும் பாலம் அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறும், சேகரித்த பொருள்களை இக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறும் மிக வினையமாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

த. மகாசிவம்,
பொதுச் செயலாளர்.

442 பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். [சி-0241]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவபாக்கியம்

காரைநகர் பூதனைப்பை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவபாக்கியம் 13-07-1991 அன்று அகால மரணமானார். அன்னார் காலம் சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சிவஞானத்தின் [ரூ 3, பற்றி சார்ச் உரிமையாளர், கிளிநொச்சி] அன்புத் தாயாரும் ஆவார். இவரது இறுதிச் சடங்குகள் 14 - 07 - 1991 அன்று நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராசலிங்கம் சந்திரமதி.
(17528)

### சண்முகஐயர் கணபதிச்சாமி குருக்கள்
**[வன்னி ஐயா - நாகர் கோவில் அர்ச்சகர்]**

சண்முகஐயர் கணபதிச்சாமிக் குருக்கள் [வன்னி ஐயா - நாகர் கோவில் அர்ச்சகர்] 14-07-1991 ஞாயிற்றுக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் திருமதி க. விசாலாட்சியம்மாவின் அன்புக் கணவரும், சிவசண்முக சர்மா, ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், வே. விஸ்வநாத சர்மாவின் அன்பு மாமனாரும், அபிராமி, அபிரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாத்தாவும், ச. உருத்திரானந்த சர்மாவின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-7-1991 திங்கள் 12-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யான்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
யோ. நாகராஜ சர்மா

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (17283)


## கஸ்தூரி, வானதி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஆனையிறவில் கடந்த 11 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் கஸ்தூரி, வானதி ஆகிய பெண் போராளிகளும் களப்பலியானார்கள்.

கஸ்தூரி (வசந்தி கணேசன் — ஊரெழு) சிறந்த கவிஞர். இவர் ''தீக்குளிக்கோம் தீயிட்டெரிப்போம்'' என்ற புகழ் பெற்ற நாடகத்தை நெறியாள்கை செய்தவர். இந்த நாடகம் முத்தமிழ் விழா அரங்கில் பெரும் பாராட்டைப் பெற்றதாகும்.

வானதி (பத்மசோதி சண்முகநாதபிள்ளை — நயினாதீவு) வலிகாமம் பிரிவின் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க முன்னாள் பொறுப்பாளர் ஆவார். (ஒ)

## தாக்கப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

சுன்னாகம் மயிலங்காட்டில் நேற்று விடுதலைப்புலிகளின் பாதுகாப்பில் இருந்து தப்பி ஓடிய பெண் கைதியை துரத்திப்பிடிக்கச் சென்ற ஒருவர் அப்பெண்ணின் உறவினர்களால் நையப்புடைக்கப்பட்டார்.

சம்பந்தப்பட்ட பெண் கசிப்பு காய்ச்சி விற்ற குற்றத்திற்காக கைதுசெய்யப்பட்டிருந்தார்.

தாக்குதலுக்கு இலக்கான ஏழாலையைச் சேர்ந்த சிவகுமார் அநுரதன் (வயது 22) சுய நினைவிழந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

[ஒ-15]

## அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 15

கூட்டுறவு உதவி ஆணையாளர், ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரை இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ். செயலகத்தில் தம்மைச் சந்திக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (ஒ)

## சாரணர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 15

வட மாகாணத்தில் உள்ள சகல சாரணர்களும் திரிசாரணர்களும், சாரண முக்கியஸ்தவர்களும் இன்று காலை 9-30 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ''பாலம்'' பொதுப்பணி நிறுவனத்தில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ)

## கொடிகாமத்தில் பொம்மர் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கொடிகாமம் சந்திக்கு அருகில் நேற்று முன்தினம் பகல் 1-30 மணியளவில் பொம்மர் றொக்கட் தாக்குதலை நடத்தியது.

நேற்று முற்பகல் 10 மணியளவிலும் பொம்மர் ஒன்று கொடிகாமம் சந்தைப் பகுதியில் குத்திப்பதிந்து விட்டு, தாக்குதல் நடத்தாமல் சென்று விட்டது. (ஒ-3)

## முல்லைத்தீவில் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 15

முல்லைத்தீவு மாவட்டம் பட்டிக்குடியிருப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப்புலிகள் துணைப் படை வீரரான சிவசம்பு சிவராசா [வயது 32] என்பவர் வீரமரணமடைந்தார்.

இந்தச் [illegible] தாசா நல்லான் என்ற ஒருவரும் உயிரிழந்தார்.

[ஒ-5]

# நுவரெலியாப் பகுதியில் 17 தடை முகாம்கள்!

கொழும்பு, ஜூலை 15

நுவரெலியா மாவட்டத்தில் பதினேழு சோதனைத் தடைமுகாம்களைப் பொலீஸார் நிறுவியுள்ளனர்,

சகல வாகனங்களும் இத் தடைமுகாம்களில் சோதனையிடப்பட்டே நுவரெலியா செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்புச் சந்தேக நபரான வரதன் கொட்டகலையில் 'சயனைட்' அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவத்தின் பின்னரே இந்தத் தடைமுகாம்கள் அமைக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தின் பின்னர் நுவரெலியா, தலவாக்கலை, லிந்துல, அக்கரப்பத்தனை, ஹற்றன், நானுஓயா ஆகிய இடங்களில் வீடுவீடாகச் சென்று பொலீஸார் தேடுதல் நடத்தினர்.

அச்சமயத்தில் கந்தப்பொளையில் தேயிலைச் செடிகளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரிவோல்வர் ஒன்றையும் வெடிமருந்துகளையும் பொலீஸார் கைப்பற்றினர். [ஔ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கடந்த 10 ஆம் திகதி மட்டக்களப்பில் உள்ள றுவேக்குளம் என்னுமிடத்தில் விசேட அதிரடிப் படையினருடன் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ரூபன் (அம்பாறை) என்பவர் வீரமரணமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

## வடமராட்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து இடம்பெயர்ந்தன.

அவ்ரோக் குண்டு வீச்சால் இப்பகுதியில் காயமடைந்த பொன்னம்பலம் தேவநேசன் [வயது 20] மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் சுண்டிக்குளம் பகுதி மீது நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் சில வீடுகள் எரிந்து நாசமாகின. கால்நடைகள் சிலவும் இறந்தன.

வெற்றிலைக்கேணியில் அவ்ரோ வீசிய குண்டினால் கூட்டுறவுச் சங்கக் கடை ஒன்று உட்பட பத்துக் கட்டடங்கள் பலத்த சேதம் அடைந்தன. இத்தாக்குதலில் திருமதி மகேந்திரன் மனோரஞ்சினி என்ற பெண் காயமடைந்தார்.

இப்பகுதியில் நேற்று இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலில் மூத்ததம்பி சபாரத்தினம் [வயது 47] படுகாயமடைந்தார்.

இந்தப் பகுதிகளில் உள்ள குடிமனைகள் மீது அடிக்கடி ஹெலிக்கொப்டரிலிருந்து கிரனேட்டுகளும் வீசப்பட்டு வருகின்றன.

தாளையடி முதல் கட்டைக்காடு வரையுள்ள பகுதிகளில் நேற்று முழுவதும் கடும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன,

நேற்று மாலை கட்டைக்காட்டுப் பகுதியை நோக்கி பீரங்கிப் படகுகளிலிருந்து ஒருவிதமான எரிகுண்டுகள் போன்ற ஷெல்கள் வீசப்பட்டன. இந்தச் ஷெல்கள் விழுந்த இடம் எங்கும் பற்றி எரிவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-144-15)

## கட்டைக்காட்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரையிலிருந்து சுமார் அரை மைல் தூரம் வரை முன்னேறிய பீரங்கிப் படகுகள், புலிகளின் கடும் தாக்குதலை அடுத்து பின்வாங்கியதாகக் கூறப்படுகிறது.

பின்வாங்கிய படையினர் பின்னர் கட்டைக்காடு கடல் வழியாக கரையிறங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரையிறங்கிய சுமார் 300 படையினரை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்துத் தாக்கி வருகின்றனர்.

அப்பகுதியில் கடும் வானத் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன. (உ-15-144)

## கோப்பாயில்

யாழ்ப்பாணம், ஜூலை 15

ஆனையிறவு மோதலில் வீரமரணமடைந்த 8 போராளிகளின் புகழுடல்கள் நேற்று இரவு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டன. (உ-15)

## ஒய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 15

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஜூலை மாத ஓய்வூதிய வவுச்சர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி கொழும்பிலிருந்து வடக்கே புறப்படவுள்ள கப்பலில் அனுப்பி வைக்கப்படும் என்று அரச அதிபருக்கு நேற்று கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது. [ஒ-5]

## ஊர்காவலர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வவுனியா மாமடுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் ஊர்காவலர் ஒருவர் பலியானார். இச்சம்பவத்தின் போது ஏனைய ஊர்காவலர்கள் அங்கிருந்து ஒடித் தப்பி விட்டனர்.

அவர்களிடமிருந்து 303 ரக துப்பாக்கி ஒன்று, 12 ரவைகள், 2 தோட்டாக்கள் ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன. [ஒ-5]

## மிக நெருக்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கா'' என்று நேரில் மோதி முடிவு செய்யும் நிலையில் இரு தரப்பினரும் சமர் புரிந்து வருகின்றனர்.

நெருக்கமாக நின்று மோதுவதால் மோதும் இடத்தில் உள்ள போராளிகள் மீது ஷெல் தாக்குதல்களையோ, விமான தாக்குதல்களையோ மேற்கொள்ள முடியாத நிலையில் படையினர் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது, [உ-3]

## காரைநகர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளார்.

திருமதி சண்முகநாதன், அவரது மகன் அருணகிரி [18 வயது] மற்றும் மூவரும் காயமடைந்தனர்.

ஷெல் வீச்சு அதிர்ச்சியில் மற்றொருரு பெண் மரணமானதாகக் கூறப்பட்ட போதும், அதனை ஊர்ஜிதம் செய்து கொள்ள முடியவில்லை.

இதேவேளை நேற்று நண்பகல் 11 மணியளவிலும் மூளாய்ப் பகுதியை நோக்கி இரண்டு ஷெல்கள் ஏவி விடப்பட்டன. (ஒ 5-15)

## உப்பள...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிருந்து சற்றுப் பின்வாங்கி நிலைகொண்டிருந்ததாகத் தெரியவந்தது.

நேற்றிரவு முகாம் பகுதியை முற்றாக வீழ்த்தும் முயற்சியில் புலிகள் ஈடுபடக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

முகாம் பகுதியில் நேற்றுப் பகல் விட்டு, விட்டு விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இரவு கடும் மோதல் வெடித்தது.

(உ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 228/[illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-07-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org